# திட்டங்கள்



| எண் | திட்டங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | சிறு வணிகக்கடன் வழங்கும் திட்டம் | 2 - 3 |
| 2 | வியாபாரம்/தொழில் செய்திட கூட்டுறவு வங்கிகள் மூலம் தனி நபர் கடன் வழங்குதல் | 4 - 6 |
| 3 | முத்ரா வங்கித் திட்டம் | 6 - 7 |
| 4 | கறவை மாடு வாங்கிட கடனுதவி | 7 - 8 |
| 5 | போக்குவரத்து தொழில் தொடங்குவதற்கான கடன் வழங்குதல் | 8 - 9 |
| 6 | ஆட்டோ தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆட்டோ வாங்க கடன் வழங்கும் திட்டம் | 10 - 12 |
| 7 | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு நிதியுதவித் திட்டம் | 12 - 13 |
| 8 | டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் | 14 - 15 |
| 9 | டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் | 15 - 16 |
| 10 | சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் | 16 - 17 |
| 11 | ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் நிதியுதவித் திட்டம் | 17 - 18 |
| 12 | பிரதமரின் பெண் ஆற்றல் பெற செய்தல் (UDAAN) | 18 - 19 |
| 13 | குழந்தை நல பரிசு பெட்டகம் வழங்கும் திட்டம் | 19 |
| 14 | ஊரக கட்டமைப்புத் திட்டம் | 20 - 21 |
| 15 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 21 - 23 |
| 16 | இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் | 24 - 26 |
| 17 | பணிக்கு செல்லும் மகளிருக்கான ஸ்கூட்டர் திட்டம் | 26 - 27 |
| 18 | இலவச கட்டாய கல்வி சட்டம் | 27 - 29 |
| 19 | சலுகைகள் | 30 - 48 |

## சிறு வணிகக்கடன் வழங்கும் திட்டம்

சிறுபான்மை பிரிவைச் சேர்ந்த பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்கள் சுய உதவிக் குழுக்கள் அமைத்து தனியாகவோ அல்லது சேர்ந்தோ சிறு வியாபாரம் அல்லது தொழில் செய்து தங்களது வருமானத்தை பெருக்கி அதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக இத்திட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் **02.01.2004** முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### எந்தெந்த சிறுதொழில்களுக்கு வணிகக் கடன் வழங்கப்படுகிறது?

வருமானப் பெருக்கத்திற்காக கிராம/நகர்ப்புறங்களில் மேற்கொள்ளும் எந்தவித சிறு தொழில்கள்/சிறு வியாபாரங்களுக்கும் கடன் வழங்கப்படுகிறது. ஊதாரணமாக, காய்கறிக்கடை, மீன் வியாபாரம், தையல் கடை, வியாபாரம், பலகாரக்கடை மற்றும் பிற கைத் தொழில்கள்.

### இச்சிறு வணிகக்கடன் பெறுவதற்கான தகுதிகள் என்ன?

விண்ணப்பதாரர் இசுலாமியர் கிறித்தவர் புத்த மதத்தினர் சீக்கியர் மற்றும் பாரசீகியர் இதில் ஏதாவது ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.சிறுபான்மை சுய உதவிக்குழுவில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அக்குழு குறைந்தது **6** மாத காலம் சேமித்தல் மற்றும் கடன் அளித்தல் பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் நகர்ப்புறத்தில் வசிப்பவர் எனில் ரூ.**54,500/-** மற்றும் கிராமப்புறம் எனில் ரூ.**39,500/-**க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

### ஒரு குழு சிறுபான்மை சுய உதவிக்குழுவாக கருதப்பட என்ன தகுதிகள் இருக்க வேண்டும்?

சுய உதவிக்குழுவில் குறைந்தபட்சம் **10** மற்றும் அதிகபட்சம் **20** நபர்கள் இருக்க வேண்டும். உறுப்பினர்களில் குறைந்தபட்சம் **75** விழுக்காடு நபர்கள் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். சில சமயம் (in exceptional cases), உறுப்பினர்களில் **60** விழுக்காட்டினர் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்துஇ மீதமுள்ள **40** விழுக்காடு உறுப்பினர்கள் பிற்பட்டோர்/ ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ கணவனை இழந்தவர்/

ஊனமுற்றோராக இருப்பின் அக்குழுவும் சிறுபான்மை சுய உதவிக்குழுவாகக் கருதப்படும்.

**இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் கடன் தொகை எவ்வளவு?**

இத்திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.25,000/- கடன் அளிக்கப்படும்.

**சிறு கடனுக்கான வட்டி விகிதம் எவ்வளவு?**

சிறுகடனுக்கு ஆண்டு வட்டி விகிதம் 4 விழுக்காடு மட்டுமே ஆகும்.

**கடன் வழங்குவதில் பெண்களுக்கு ஏதும் முன்னுரிமை உண்டா?**

பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் ஆண், பெண் இருவரும் உறுப்பினராக இருக்கும் சுய உதவிக்குழுக்களில் பெண் உறுப்பினருக்கும், சிறுகடன் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

**சிறுகடன் பெற சுய உதவிக்குழு வங்கி சேமிப்புக் கணக்கு வைத்திருக்க வேண்டுமா?**

ஆம். இச் சிறுகடன் டாம்கோ நிறுவனத்தால் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படுவதால் சுய உதவிக்குழுக்களுக்கு கூட்டுறவு வங்கிகளில் சேமிப்புக் கணக்கு இருக்கவேண்டும். வங்கிக்கணக்கு இல்லாத குழுக்கள் கூட்டுறவு வங்கியில் புதியதாக சேமிப்பு கணக்கு துவக்கலாம்.

**கடன் தொகையினை எவ்வளவு காலத்தில் திரும்பச் செலுத்த வேண்டும்?**

கடன் தொகைக்கு ஏற்ப 12 மாதங்கள் அல்லது 24 மாதங்கள் அல்லது 36 மாத தவணைகளில் கடன் தொகையை திரும்பச் செலுத்தலாம்.

# சலுகைகள்


| எண் | சலுகைகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு உதவித் தொகை | 31 |
| 2 | பிஎச்.டி. மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை | 32 |
| 3 | கிஷோர் வைக்யானிக் புராட்சகன் யோஜனா உதவித்தொகை | 32 - 33 |
| 4 | அண்ணல் காந்தி நினைவுப் பரிசுத்தொகை | 33 |
| 5 | சிறந்த மாணவர்களுக்கான ஊக்கத்தொகை | 34 |
| 6 | தூய்மைப் பணி புரிவோரின் குழந்தைகளுக்கு உதவித் தொகை | 34 - 35 |
| 7 | விவசாய வாரிசுகளுக்கான உதவி தொகை திட்டம் (தொழில்நுட்ப கல்வி) | 35 - 36 |
| 8 | விவசாய வாரிசுகளுக்கான உதவி தொகை திட்டம் (கல்லூரி கல்வி) | 36 - 37 |
| 9 | துப்புரவுத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவி | 37 |
| 10 | தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் | 37 - 38 |
| 11 | ஊரக திறனாய்வுத் தேர்வுத் திட்டம் | 38 |
| 12 | தமிழ் முதல் மொழிப் பாடம்: மாணவர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை | 38 - 39 |
| 13 | மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி உதவித் தொகை | 39 |
| 14 | தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை | 40 - 41 |
| 15 | முதல் தலைமுறை பட்டப் படிப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை | 41 - 42 |
| 16 | சிறுபான்மை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை | 42 - 43 |
| 17 | மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை | 43 |
| 18 | தேசிய தகுதி-உதவி கல்வி உதவித் தொகை திட்டம் | 44 - 45 |
| 19 | ஆசாத் தேசிய கல்வி உதவித் தொகை | 45 |
| 20 | மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வழங்கும் உதவித்தொகை | 46 - 47 |
| 21 | கான்படரேஷன் ஆப் இந்தியன் இன்டஸ்ட்ரி (சி.ஐ.ஐ.) கல்வி உதவித் தொகை | 47 |
| 22 | ஒற்றைப் பெண் குழந்தைக்கு கல்வி உதவித்தொகை | 47 - 48 |
| 23 | பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவச படிப்பு திட்டம் | 48 |

## ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு உதவித் தொகை

தமிழ்நாட்டில் உள்ள துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு தமிழக அரசு கல்வி உதவித் தொகை வழங்குகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் குழந்தைகள், முதுநிலை பட்டப்படிப்பு பயில இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**எந்த பட்டப்படிப்புகளுக்கு உதவித்தொகை வழங்கப்படும்?**

எம்.ஏ., எம்.எஸ்சி., எம்.காம்., எம்.எட்., எம்.எல்., எம்.சி.ஏ., எம்.பில். ஆகிய பட்டப்படிப்புகளை தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

இந்த உதவித் தொகை பெறுவதற்கு எந்த ஊதிய வரம்பும் அவசியம் இல்லை. ஆனால், மாணவர்கள் அவர்கள் பயின்ற இளநிலை பட்டப்படிப்பில் 60 மதிப்பெண்ணுடன் கண்டிப்பாக தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**எவ்வளவு பணம் கிடைக்கும்?**

மேலும் மதிப்பெண் அடிப்படையில்தான் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். இந்த திட்டத்தின் கீழ் சாதாரண மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.120ம், விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.300ம் வழங்கப்படும்.

## பிஎச்.டி. மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை

பிஎச்.டி. பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது.

**பிஎச்.டி. உதவித் தொகை பெற அவசியமானவை என்ன?**

இந்த உதவித் தொகையைப் பெறுவதற்கு, ஒரு மாணவர் அரசு அல்லது அரசு உதவித் தொகைப் பெறும் கல்லூரியில் பிஎச்.டி. பதிவு செய்திருக்க வேண்டும். ஒன்று முதல் 3 ஆண்டுகள் வரை இருக்கலாம். எம்.பில். முடித்தவராக இருக்க வேண்டியது கட்டாயம்.

முதுகலைப் பட்டப்படிப்பில் 60 மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வேறு எந்த கல்வி உதவித் தொகையும் பெறாத மாணவராகவும் இருக்க வேண்டும். பகுதி நேரமாக பிஎச்.டி. பயிலும் மாணவருக்கு இந்த உதவித் தொகை தரப்படமாட்டாது.

**எவ்வளவு பணம் கிடைக்கும்?**

ஒவ்வொரு ஆண்டும் மதிப்பெண்ணை அடிப்படையாகக் கொண்டு உதவித் தொகை பெறும் 60 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000 உதவித் தொகையாக வழங்கப்படும்.

விண்ணப்பபடிவம்:
http://tndce.in/Downloads/Ph_D_Scholarship_2016_2017.PDF

## கிஷோர் வைக்யானிக் புராட்சகன் யோஜனா உதவித்தொகை

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கும், அடிப்படை அறிவியல் பிரிவுகளை பட்டப்படிப்பில் எடுத்து கற்பதோடு மட்டுமின்றி, தொடர்ந்து ஆய்வில் ஈடுபடும் உற்சாகமும், உத்வேகமும் உள்ள மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையை அறிவித்துள்ளது கிஷோர் வைக்யானிக் புராட்சகன் யோஜனா (Kishore Vaigyanik Protsahan Yojana) நிறுவனம்.